# குறிஞ்சித்தேனி

ஆசிரியர்: கண்டி இரா.அ. இராமன் 17.09.2006 ஞாயிற்றுக்கிழமை

குண்டசாலை லக்கிலேண்ட் பிஸ்கட் - கண்டி நாகலிங்கம் ஜுவலர்ஸ்
ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன்
கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் நடாத்தும்

## சொல்லின் செல்வர் அமரர் செ. நடராஜா அவர்களின் நினைவலைகள்



| இடம் |
| --- |
| ஸ்ரீ புஸ்பதான மண்டபம் டி.எஸ். சேனாநாயக்க வீதி - கண்டி |
| காலம் |
| 24.09.2006 ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் |
| காலை 10:30 மணி |





அமரர் சொல்லின் செல்வர் செ. நடராஜா தனது வித்தியாலய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்துகிறார்.

பேராசிரியர் எம்.சின்னத்தம்பி அவர்கள் சொல்லின் செல்வர் அவர்களை கௌரவிக்கிறார்.



**என்னம் உறுதியாக இருந்தால் என்னியபடி உயரலாம்**

**பிரதம விருந்தினர்**

முன்னாள் மத்திய மாகாண கல்வி, இந்து கலாசார அமைச்சர்

**வே. இராதாகிருஷ்ணன்**

மத்திய மாகாண சபை உறுப்பினர்

**சிறப்பு விருந்தினர்கள்**

**கே.கே. சற்குணம்**
விநியோக முகாமையாளர் - தினக்குரல்

**அருள் சத்தியநாதன்**
ஆசிரியர் - தினகரன் வார இதழ்

**விளக்கில் ஒளி ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைப்பவர்கள்**

**எஸ். முத்தையா** ஜே.பி. **திருமதி லக்ஷ்மி முத்தையா**
லக்கிலேண்ட் பிஸ்கட் - குண்டசாலை

**நாகலிங்கம் இரத்தினசபாபதி** ஜே.பி.
நாகலிங்கம் ஜுவலர்ஸ் - கண்டி

**திருமதி மகாலக்ஷ்மி சேகரன் சோமபாலன்**
ஜனலங்கா எண்டபிரைசஸ் - கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு மலர்கள் மலரட்டும்
நாறும் கீழ்மைகள் தகரட்டும்

# குறிஞ்சித் தேனீ

மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
18/13, பூரணவத்தை, கண்டி.

24.09.2006 ஞாயிற்றுக்கிழமை

உங்களோடு கொஞ்ச நேரம்........

சொல்லின் செல்வர் அமரர்
செ. நடராஜா அவர்கள்
அவரது குடும்பத்தைத் தவிர
வேறு எந்த தனிநபருக்கோ
சொந்தமானவரல்ல,
சொந்தம் கொண்டாடவும்
முடியாது.
அவர் ஒரு சூரியன்,
அவர் ஒரு ஆதவன்,
அவர் ஒரு வானம்,
அவர் ஒரு கடல்,
அவர் ஒரு காற்று.
இவற்றை யாரும்
சொந்தம் கொண்டாட முடியாது.
அவர் பொதுவான மானுட நேயன்.
மனிதாபிமானம் கொண்ட
ஒரு மாமனிதன்.
அமைதி, அடக்கம், கனிவு,
எளிமை அறிவொளி வீசும்
அறிவு ஜீவி.
கருணை ஒளி வீசும்
கண்களைக் கொண்டவர்.
இதற்கப்பால்
அவரை நேசித்த அனைவருக்கும்
சொந்தமானவர்.
அவரின் அறிவைப் பலர்
பயன்படுத்திக் கொண்டனர்.
அதில் நானும் ஒருவன்.
அந்த நன்றிக்கடனைத் தீர்க்கவே
இந்நிகழ்வு.
சாகா வரம் பெற்ற
சகோதரர் நடராஜா
அவர்களுக்கு
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
வருடம் தோறும் அவர் நினைவாக
காத்திரமான பதிவுகளை
ஆற்றவிருக்கிறது என்பதை
"குறிஞ்சித் தேனீ" மூலம்
பதிவு செய்கிறேன்.
நடராஜா அவர்கள் என்றும்
எம்மோடு இருப்பார்.

என்றென்றும் அன்புடன்
கண்டி இரா.அ. இராமன்.

## அஞ்சலி உரை

**தலைமை**
கலாநிதி துரை. மனோகரன்
தலைவர், தமிழ்த் துறை பேராதனை பல்கலைக்கழகம்

**வரவேற்புரை**
கண்டி இரா. அ. இராமன்
தலைவர், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்

**அஞ்சலி உரை**
பேராசிரியர் க. அருணாசலம்
தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் எம். சின்னத்தம்பி
பொருளியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

டாக்டர் தி. ஞானசேகரன்
பிரதம ஆசிரியர், "ஞானம்"

அந்தனி ஜீவா
செயலாளர், கண்டித் தமிழ்ச் சங்கம்

ரா. நித்தியானந்தன்
ஆசரியர், கண்டி திரித்துவக் கல்லூரி

எம். எம். பீரமுகம்மது
செயலாளர், மாத்தளை இஸ்லாமிய இலக்கியப் பேரவை

எஸ். தமிழ்ச் செல்வன்
எழுத்தாளர்,
உதவிக் கல்விப் பணிப்பாளர், கண்டி வலயம்

இரா. மகேஸ்வரன் எம்.ஏ.
சிரேஷ்ட துணை நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

சுதர்ம மகாராஜன்
எழுத்தாளர்

**நன்றியுரை**
இக்பால் அலி
செயலாளர், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்.
ஊடகவியலாளர்

## அன்பில் அவர் ஒரு தாய்

என் இதயத்தில் பொங்கி எழும் உணர்வின் கண்ணீர் துளிகள்
அமரர் நடராஜா அவர்களுக்கு காணிக்கையாகட்டும்.
அவர் தனது மேடைபேச்சின் மூலம்
வான் உயரத்திற்கு உயர்ந்தவர்.
சொற்களால் மனித மனங்களை தொட்டவர். வென்றவர்.
பண்பில் அவர் ஒரு சிகரம்.
அன்பில் அவர் ஒரு தாய்.

- அந்தனி ஜீவா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டிகள் மறைவதில்லை அவர்கள் காட்டிய வழியில் பூக்கும் ஒவ்வொரு பூவிலும் உயிர்த்திருப்பார்கள்.

கண்டி அசோகா வித்தியாலயம் எனும் பல்கலைக்கழகத்தின் அச்சாணியாய் ஆணிவேராய் இருந்தவர் அமரர் நடராஜா அவர்கள். அங்கு நாம் வெறும் ஏட்டுச்சுரைக்காய் மட்டும் ஊட்டி வளர்க்கப்படவில்லை. புத்தகக் கல்வியைத் தாண்டி பல்வேறு துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டோம். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் நடக்கும் தமிழ், ஆங்கிலம் அல்லது சிங்கள இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்வது கட்டாய மாக்கப்பட்டதால் எங்கள் பேச்சு, பாடல், நாடகம் மற்றும் கவித்திறமைகள் வெளிப்பட்டன மெருகூட்டப் பட்டன.

ஒவ்வொரு வருடமும் பள்ளியின் இல்லங்களுக் கிடையே நடத்தப்பட்ட மும்மொழி பேச்சுப் போட்டி, எழுத்துக் கூட்டல் போட்டி, விவாதப் போட்டி மற்றும் கால்பந்து, ஹொக்கி, கிறிக்கட், மெய்வல்லுனர் போட்டிகள் எங்களை எல்லாத்துறைகளிலும் வல்லவராக்கியது. இன்று வெகுவாக அருகிவரும் வாசிக்கும் பழக்கம் அன்று எங்களிடையே ஊக்குவிக்கப்பட்டது.

தனியாக நேரம் ஒதுக்கப்பட்டு வாசிப்பது கட்டாயமாக்கப்பட்டது. ஒழுக்கம், கடமை, பணிவு, திட்டமிட்ட செயல், நேரம் தவறாமை, ஒன்றுபட்டு செயல் புரிதல் என சீரிய பண்புகள் பல எங்கள் இளமனங்களில் பதியவைக்கப்பட்டு புடம் போடப்பட்ட தங்கங்களாய் வெளியே வந்தோம்.

நடராஜா என்கின்ற அற்புத மனிதரின் உடல் மறைந்தாலும் அவரால் பயன்பெற்ற பல்லாயிரக்கணக்கான மாணாக்களின் நெஞ்சங்களில் அவர் என்றென்றும் நிலைத்திருப்பார். வழிகாட்டிகள் மறைவதில்லை. அவர்கள் காட்டிய வழிகளில் பூக்கும் ஒவ்வொரு பூவிலும் உயிர்த்திருப்பார்கள்.

பி.எஸ்.செல்வரட்ணம் ஜே.பி.
பழைய மாணவன்,
அசோகா வித்தியாலயம், கண்டி.



மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் நடாத்திய பேராசிரியர் க. அருணாசலம் எழுதிய, "இலங்கையில் தமிழ் இலக்கியம்" ஆய்வு நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் எஸ். பத்மநாதனிடமிருந்து நூல் ஒன்றை அமரர் செ. நடராஜா பெற்றுக் கொள்வதையும் ஊடகவியலாளர் இக்பால் அலி, நாகலிங்கம் இரத்தினசபாபதி ஜே.பி., எஸ். முத்தையாய ஜே.பி. ஆகியோர்களையும் படங்களில் காண்கிறீர்கள்.

படம்: வீரகேசரி சதீஸ்

## கண்ணீர் அஞ்சலி

| | | |
|---|---|---|
| எம். பத்மநாதன்<br>பிரத்தியேகச் செயலாளர் | எஸ்.என். தேவசிகாமணி<br>தமிழ் கல்வி இணைப்பாளர் | எஸ். நீதிராஜா<br>இந்து சமய இணைப்பாளர் |

மத்திய மாகாண இந்து கலாசார, தமிழ் கல்வி அமைச்சு

## கண்ணீர் அஞ்சலி

**ஊடகவியலாளர்கள்**

ஐ. ஏ. றசாக்
நா. அருண்காந்த்
ஆர். இராஜகோபால்
ஜே. எம். ஹாபிஸ்
எச். எம். மன்சூர்
ஸ்டார் ராசிக்
சட்டத்தரணி வைஸ்
இக்பால் அலி
ரசிட் எம். றியால்.

## என்னுள் உள்ள நடராஜா

நடராஜா சிறந்ததொரு நண்பர்.
இலக்கிய நெஞ்சன்.
மென்னுள்ளம் படைத்தோன்.
மனிதாபிமானமும் மென்போக்கும்
கொண்ட அற்புதன்.
சிறந்த முற்போக்கு சிந்தனையாளன்.
நடைமுறை வாழ்க்கையில்
அவன் ஒரு சகல கலா வல்லவன்.
அவனின் இழப்பு தமிழ் கூறும் நல்லுலகிற்கு
ஓர் பேரிழப்பு.

நா. அருண்காந்த்
ஊடகவியலாளர்
தலைவர், ஆருத்ரா இசை நடனக் கல்லூரி,
அருண் கிரியேஷன்ஸ்,
தெல்தோட்டை.




துரைவி இலக்கியச் சிந்தனை வட்ட ஆரம்ப விழாவும், "ஞானம்" சஞ்சிகையின் மூன்றாண்டு இலக்கியப் பணியும் நிகழ்வில் அமரர் நடராஜா தலைமைத் தாங்குவதையும் பேராசிரியர் துரை. மனோகரன் உரையாற்றுவதையும் சமூகத் தொண்டர் எஸ். சிவானந்தன், "ஞானம்" ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன் ஆகியோர்களையும் படத்தில் காண்கிறீர்கள்.

படம்: வீரகேசரி சதீஸ்

## கண்டி தமிழர்களின் ஒளி ஞாயிறு சொல்லின் செல்வர் செ. நடராஜா

இவரின் வெற்றியின் பின்னால் இரு விஷயங்களை அவதானிக்கலாம். முதலாவது நல்ல குடும்பம், மனைவி, இரண்டாவது வாசிக்கும் பழக்கம். அவர் நிறையவே வாசிப்பார். தேடித்தேடி வாசித்தார். இந்த வாசிப்பு இவருக்கு சிந்தனை விருத்தியையும் விசாலித்த பார்வையையும் அடக்கத்தையும் நுண்ணறிவையும் ஏற்படுத்தும். எனவே, இவரால் தளும்பாத நிறை குடமாகவும் பூரண கும்பமாகவும் ஒளிர் ஞாயிறாகவும் நிகழ முடிந்தது.

இன்று அவர் ஒரு துருவ நட்சத்திரம். அவரது மாணவர்களுக்கும் அவரது வெற்றிகளை பின்பற்ற விரும்புகிறவர்களுக்கும்.

இரா. மகேஸ்வரன் எம்.ஏ.
(சிரேஷ்ட துணை நூலகர், பேராதனைப் பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லின் செல்வர் அமரர் நடராஜாவிற்கு எமது கண்ணீர் அஞ்சலி

**திருமதி நந்தகுமார்**
அதிபர்
கண்டி விவேகாநந்தா தமிழ் வித்தியாலயம்

**திரு. க. தமோதரன்**
அதிபர்
பேராதனை தமிழ் வித்தியாலயம்

**திருமதி கஸ்தூரி இராஜேந்திரன்**
அதிபர்
கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை

**திரு. ஏ. அழகையா**
அதிபர்
கண்டி கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம்.

**திரு. எஸ். சுப்பரமணியம்**
அதிபர்
குண்டசாலை விவேகாநந்தா தமிழ் வித்தியாலயம்.

**திரு. எஸ். பாலகிருஷ்ணன்**
அதிபர்
கண்டி அசோகா வித்தியாலயம்

## சொல்லின் செல்வர் அமரர் நடராஜாவிற்கு எமது கண்ணீர் அஞ்சலி



**அந்தனி ஜீவா**
செயலாளர், மற்றும் உறுப்பினர்கள்
மலையக கலை இலக்கியப் பேரவை

**பெ. பாலசுப்பரமணியம்**
தலைவர், மற்றும் உறுப்பினர்கள்
கண்டி இந்து இளைஞர் மன்றம்

**ராஜா ஜென்கின்ஸ்**
ஸ்தாபகத் தலைவர், மற்றும் உறுப்பினர்கள்
மலையக கலை கலாசார சங்கம்
(இரத்தின தீபம்)

**றொட்றிக்கஸ்**
செயலாளர், மற்றும் உறுப்பினர்கள்
கண்டிக் கலைக் கழகம்

**எம். எம். பீர் முஹம்மது**
செயலாளர், மற்றும் உறுப்பினர்கள்
மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவை


**எஸ். விஜயகுமார்**
செயலாளர், மாத்தளை இலக்கிய வட்டம்

இந்நகழ்வில் அமரர் சொல்லின் செல்வர் செ. நடராஜா அவர்களின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தவிருக்கும் பெருந்தகைகள்....

**நாகலிங்கம் இரத்தினசபாபதி ஜே.பி.**
**வி. பி. பாலசுப்பரமணியம்**
**பி. பழனியப்பன்**
**சேகரன் சோமபாலன்**
**என். எஸ். சிவாநந்தன்**
**எம். பெரியசாமி**
**பி. கந்தசாமி**
**எம். சத்தியமூர்த்தி ஜே.பி.**
**பி. பழனிசாமி**
**கலைவாணி நடராஜா**
**பி.டி. பாலரட்ணம்**
**என். சௌந்தராஜன்**

## நடராஜா அவர்களே எனது நூலை விமர்சிக்க நீ வர வேண்டும்.

நம்ப முடியவில்லை!
நடராஜா இறந்துவிட்டாரா?
யார் சொன்னது?
அவர் சாகவில்லை.
எம்மோடுதான் இருக்கிறார்.
அசோக வித்தியாலயம்
இருக்கும் வரை
கண்டி மண்டப மேடைகள்
இருக்கும் வரை
அவர் பெயர் ஒலித்துக் கொண்டே
இருக்கும்.
யார் சொன்னது அவர்
இறந்துவிட்டார் என்று....
சகோதரா நீயும் நானும்
ஒரே மேடையில்
அமர்ந்திருப்போம்.
நீயும் நானும் போட்டி
போட்டுக் கொண்டு
உரையாற்றுவோம்.
ஏனெனில்....
நீ சொல்லின் செல்வர்
நான் சொல்லின் செல்வி
என்ன பொருத்தம்
அன்பின் நடராஜாவே
அடுத்த மாதம்
எனது நூல் வெளியீடு
என்னைப் பாராட்டிப் பேச
நீ வரவேண்டும்.
அழைப்பிதழ் உன்னைத் தேடி வரும்.



கலாபூஷணம் ரூபராணி ஜோசப்

## சொல்லின் செல்வருக்கு ஒரு கவி அஞ்சலி......

அசோகத்தின் முதல்வன்
கண்டியது தனித் தலைவன்
பேச்சு நடை வல்லான்
பார்வையிலே கனிவான் - ஏன்
எம்மைவிட்டு பிரிந்துவிட்டாய்?

அவன்
வார்த்தைகளில் வசப்பட்ட - எம்
வகுப்பறையை நினைக்கிறோம்.
பாடத்தை பதிய வைத்த - உன்
பதிவில் நாம் நனைகிறோம்.

உன்
தேகமதை சுமந்துவரும் - இந்த
பேழைதனை பார்க்கையிலே
அசோக வனமது
கண்ணீர் மழை பொழிகிறது.

ஏன் - நீ
விழாக்களின் நாயகனாய்?
ஏன் அதை எம்
விழிகளில் அதை விட்டுவிட்டுச் சென்றாய்?

நினைக்கின்றோம்
மேடையிலே உருவம் நின்று - பல
சொன்ன கதை.
சொல்லின் செல்வனே! உன்
சொற்களை இன்று நாம் தவறவிட்டோம்.

நவராத்திரி விழாக்களில் - இனி
உன் நவரச உரை எங்கே?
வில்லுப்பாட்டை நீ
ரசித்த ரசனை இனி எங்கே?

சொற் பொதிந்து, பொருள் பொதிந்து
சுகமனைத்தும் அதில் பதிந்து
கற்கண்டை விட கனிவான - உன்
உரைகள் இனி எங்கே?
கண்டி மக்கள் மட்டுமல்ல
நாடே அதை சுவைத்தது. அந்த
உரை இனி எங்கே?

கண்டி தந்த தவப்புதல்வா!
கண்ணீரை தானே
இன்று தந்தாய்.
என்ன செய்வோம் என்று
இங்கு நாம் கதி கலங்க
எங்கு நீ சென்று விட்டாய்?

அசோகா
சோகவனமாய் எம்
மனங்கள் எல்லாம்
பாலைவனமாக
கண்ணீரை சமர்ப்பிக்கின்றோம்
உன் ஆத்மா சாந்திக்காக......

ரா. நித்தியானந்தன்
பலகொல்ல - கண்டி

## பத்திரிகையாளர் பார்வையில் நடா....

இவர் மானுட மேதை அனைவரையும் ஓரக்கண்ணால் பார்க்காத மாமனிதர். ஆசிரியர் உலகில் தனக்கென தடம் பதித்தவர். இவரை இழந்ததே எமக்கேற்பட்ட பெரும் இழப்பாகும். ஆண்டுகள் பல கழிந்தாலும் இப்படியும் ஒரு புதுமையாளர் உருவெடுப்பாரோ? மேடை பேச்சுத் துறைக்கும் ஊடகத்துறைக்கும் செழுமை சேர்த்தவர்.

ஐ.ஏ. றசாக்
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிக்கும் பழக்கத்திற்கு நமது வாரிசுகள்

செ. நடராஜா
பி.எஸ்.சி., டிப்.இன்.எட்

நன்றி - மத்திய மாகாண சாகித்திய விழா மலர் 2002



உலக வங்கியின் அறிக்கையின்படி இன்று தென்னாசிய நாடுகளில் - இலங்கையே மிக உச்ச எழுத்தறிவு மட்டத்தைப் பெற்றுள்ளது. இதற்கு, இலவசக்கல்வி, மிஷனரி பாடசாலைக் கையேற்பு, தாய்மொழி மூலக்கல்வி, தொடர்ந்து அக்கறையுடன் வகுக்கப்பட்ட கல்வித் திட்டங்கள் போன்ற அரசின் பொது நலன் பேணும் நடவடிக்கைகளே அடிப்படைக் காரணங்களாய் அமைந்தன. இன்றைய தேசியக் கல்விக் கொள்கை "இளைஞர்களின் கல்வி அவர்களின் புதிய தகவல் மைய, அறிவு மைய நூற்றாண்டில் வாழ ஆயத்தம் செய்வதாய் அமைய வேண்டும்" என தூரதிருஷ்டி நோக்குடன் வகுக்கப் பட்டுள்ளது. இந்தப் புத்தாயிரம் ஆண்டின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு, நம் நாட்டின் ஏனைய சமூகங்கள் உருவாக்கப்படும் வேளையில் மலையக மக்கள் சாதாரண எழுத்தறிவு, ஆரம்பக் கல்வித் தேவைகளைக் கூட பூரணமாக நிறைவேற்ற முடியாதுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

நீண்டகாலம் வாக்குரிமை பறிக்கப் பட்ட நிலையில் வாழ்ந்தமையால் போதிய பிரதிநிதித்துவம் அற்ற நிலையில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 5.5 சதவீதமான மலையகச் சமூகம் புறக்கணிக்கப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. போதிய பாடசாலைகள், ஆசிரியர்கள், ஏனைய பௌதீக வளங்கள் என்பன குறைவாகவே இருந்தன. பெற்றோரின் அறியாமை, வறுமை என்பன இத்தேக்க நிலைக்குரிய பிற பிரதான காரணங்கள். எனினும் 1970 களுக்குப் பிறகு கல்வி நிலைமைகள் சற்றே மாறுபடலாயின. நமது வாக்குப் பலம் அதிகரித்தமை, பெருந்தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றமை, விகிதசமப் பிரதிநிதித்துவ முறையினால் மலையக அரசியல் தலைமைகளுக்கு கிடைத்த பேரம் பேசும் நிலைமைகள் என்பன தேக்க நிலையினை கட்டறுக்க துணை செய்தன. இன்றும் கூட மலையகம் கல்வியில் பின்தங்கிய சமூகமாகவே திகழ்கிறது என்பது கசப்பான உண்மையாகும். இக்கல்விப் பின்னடைவு அவர்களைப் பொது, தனியார் துறை வேலை வாய்ப்புக்களில் மிகப் பின்தங்கிய நிலையிலேயே நிற்கச் செய்துள்ளது. எனவே மலையக மக்கள் தொடர்ந்தும் பெருந் தோட்டத் தொழிற்துறைகளையே சார்ந்து வாழ வேண்டிய நிலையிலுள்ளனர்.

இவ்வாறு பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் கல்வி ஒளி பெற்றுப் பதவி பெற்றிருக்கக்கூடிய வழிகளெல்லாம் ஆராய்ந்தறிந்து, கையாளப்பட வேண்டும். அவற்றுள் ஒன்றுதான் நூலகப் பயன்பாடு. "வாசிப்பு மனிதனை முழுமையடையச் செய்கின்றது" என்றார் ஆங்கிலக் கவிஞர் பேக்கன். இதைத்தான் "மாந்தற்கு கற்றனைத் தூறும் அறிவு" என்றான் வள்ளுவப் பெருந்தகை. ஆனால் நம் மலையகத்தவரிடம் நூல்களை வாங்கிக் கற்பதற்குரிய பொருளாதார வசதிகள் இல்லை. நூல்களைக் கற்பதால் அறிவு பெருகும் என்ற உணர்வு பலரிடம் இல்லை. நூலகங்களைப் பயன்படுத்தும் நம் சமூக ஆசிரியர்களும் ஒப்பீட்டளவில் மிக மிகக் குறைவே. வசிக்கும் சூழல் வாசிக்கும் பழக்கத்தை இருட்டடிப்புச் செய்கின்றது. எனவே மாணவர்களிடம் வாசிக்கும் பழக்கம் பூச்சியத்திற்கு அடுத்த கட்டத்திலேயே உள்ளது. பிற சமூக மாணவர்களது நடையுடை பாவனைகளைப் பின்பற்றுவதில் காட்டும் ஆர்வம், கேளிக்கை நிகழ்வுகள், மெல்லிசை, துள்ளிசை கச்சேரிகள் என்பவற்றில் காட்டும் மோகம், 24 மணி நேர வானொலி நிகழ்ச்சிகளில் ஏற்பட்டுள்ள பிரேமை, தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் கொண்டுள்ள அதீத ஈடுபாடு என்பன வாசிக்கும் கலையில் காட்டப்படுவதில்லை.

அட்டைக்கடியோடு அரிய வழி நடந்து கட்டைகளில் இடறிய கால்களின் வாரிசுகள், இரட்டை மாடிக் கட்டிடங்களில் இருந்து படிக்கும் காலமிது. படிப்பதற்கேற்ற பல வசதிகளைப் படிப்படியாகப் பெற்றுக் கொண்டிருக்கின்றன நமது பாடசாலைகள். இடம், கட்டிடம், தளபாடம், ஆசிரியர்கள் எல்லாமே அமைந்த பாடசாலை எனக் கூறும் அளவுக்கு இல்லாவிட்டாலும் குறிப்பிடப்பட்ட வசதிகளுடன் பல பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவ்வேளையில் நூலகங்களினால் பெறக்கூடிய பயன்கள் மலையகம் எங்கனும் சென்றடையச் செய்ய வேண்டியதில் கல்வி மான்களும் அரசியல் தலைவர்களும் சமூக அமைப்புகளும் பெரும் பங்காற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

வாசிப்புத்திறன் குன்றுவதால், ஒரு மொழியை செம்மையாக எழுதவும் பேசவும் கூடிய வல்லமை குறைவடைகிறது. மலையகத்தவர் சரிவர எழுத்துக்களை உச்சரிப்பதில்லை. எழுதுவதில்லை என்ற குறைபாடு பரவலாகக் கூறப்படுகின்றது. வாசிப்புத்திறனை எம் இளம் சந்ததியினரிடையே வளர்ப்பதுதான் இவற்றை தீர்க்க ஒரே வழி.

"ஆயகலைகள் அறுபத்து நான்கு" என்று வகுத்தனர் நம் முன்னோர். ஆனால், இன்றோ ஆயிரம் ஆயிரம் கலைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. இவற்றைப் பற்றியெல்லாம் இளைய தலைமுறையினர் அறிந்து செயல்பட வேண்டும். ஊடகச் சாதனங்களில் வளர்ச்சியினால் உலகம் வெகுவாகச் சுருங்கி உலகமயமாக்கல் கொள்கை உருவாக்கியுள்ளது. வினாடிக்கு வினாடி நாம் வாழும் விஞ்ஞான உலகம் மாறி வருகின்றது. இம்மாற்றங்களையெல்லாம் நாம் அறிந்து கொள்ளாவிடின் கிணற்றுத் தவளையாக மாறிவிடுவோம். இதனால் தான் "வாழ்க்கை முழுவதும் கல்வி" போன்ற நவீன கல்விக் கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. இதற்கான சக்தி மிக்க சாதனம் நூலகமே. முதலாவதாக சிறிதோ பெரிதோ வீட்டுக்கொரு நூலகம் ஏற்பட வேண்டும். பாடசாலை நூலகங்கள் வெறும் காட்சிக் கூடங்களாக அன்றி அறிவு மேம்படுத்தும் நிலையங்களாக அமைய வேண்டும். இவற்றைப் பயன்படுத்த ஆசிரியர்களால் முன்மாதிரியான வழிகாட்டல்கள் காட்டப்பட வேண்டும். நூலக வாரம் ஏற்படுத்தப்படலாம்.

இரண்டாவதாக தமது பகுதிகளிலுள்ள பொது நூலகங்களைப் பயன்படுத்தும் பழக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். பல்துறை சார்ந்த நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைத் திரட்டி பாதுகாத்துள்ள இந் நூலகங்கள் இவற்றை இலவசமாகவோ குறைந்த கட்டணத்திலோ மக்கள் பாவனைக்கு தந்துதவுகின்றன. இவற்றை இரவலாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அங்கத்தவர்கள் பெற்றுச் செல்லலாம். உசாத்துணை நூல்களை அங்கேயே படித்து பயன்பெறலாம். சில பெரிய நூலகங்களில் உசாத்துணை நூல்களிலிருந்து பகுதிகளை மலிவாக பிரதி செய்து கொள்ளும் வாய்ப்புக்களும் நல்கப்படுகின்றன. இவை தவிர கற்புல, செவிப்புல சாதனங்களையும் அவை தந்துதவுகின்றன. எனவே, நூலகங்கள் அறிவுவிடாய் தீர்க்கும் ஊருணிகளாக அமைந்துள்ளன. எனவே அறிவுப் பசியைத் தனிப்பதற்கும் பல்துறை சார்ந்த பன்னாட்டு விவகாரங்களை அறிந்து கொள்வதற்கும் மொழியுணர்வு, கலையுணர்வு மேலோங்குவதற்கும் தனிமனித ஆளுமையை வளர்ப்பதற்கும் ஏற்ற எல்லோருக்கும் பொதுவான மலிவான சாதனம் நூலகமே.

"தேடு கல்வியிலாத ஊரைத் தீக்கிரையாக மடுப்பதே - என்னம்மைகேண்மை பெற வழியெனக் கண்டீர்" என்று பாடிய பாரதியின் கனவை நனவாக்க ஏற்றவொரு சாதனம் நூலகமே. வசதி படைத்தோர், அரசியல் தலைவர்கள், அரசு துறை சாரா அமைப்புகள் போன்றன பெருந்தோட்டங்கள் தோறும் நூலகங்களை ஏற்படுத்த முன் வருதல் வேண்டும். பெற்றோரும் கற்றோரும் நூலகப் பயன்பாட்டின் அவசியத்தை இளந் தலைமுறையினருக்கு வலியுறுத்த வேண்டும். இருக்கின்ற நூலகங்களில் உச்சப் பயன் பெற முயல வேண்டும்.

கண்டி மாநகர சபையால் நிர்வகிக்கப்படும் டி.எஸ். சேனாநாயக்க மத்திய நூலகத்தில் வெறும் 135 தமிழ் வாசிக அங்கத்தவர்களே உள்ளனர் என்பது வேடிக்கையானது மட்டுமல்ல வேதனையானதும் கூட. எனவே ஊர் தோறும் நூலகங்கள் அமைத்து அவற்றை பொன்னை போல் பாதுகாப்போம். அவற்றால் நாமும் உச்ச பயன்பெற முயல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மாணிக்கம்

## சொல்லின் செல்வர் அமரர் செ. நடராஜா

இரா. அ. இராமன்

மலையகம் ஆற்றல் மிக்க எழுத்தாளர்களை, கலைஞர்களை, நாவலாசிரியர்களை, சிறுகதை ஆசிரியர்களை, விமர்சகர்களை, பத்திரிகையாளர்களை, கல்வியாளர்களை, அரசியலாளர்களை, அறிவு ஜீவிகளை, சமூக சிந்தனையாளர்களை தந்து பெருமை கொண்டது.

அந்த வகையில் மலையகம் சிறந்த பேச்சாளர்களையும் தந்துள்ளது. அன்று மலையக இளைஞர்களின் "தளபதி" என்று போற்றப்பட்ட இர சிவலிங்கம், மற்றும் திருச்செந்தூரன் போன்றோர் சிறந்த பேச்சாளர்களாகத் திகழ்ந்தனர்.

மலையகத்தின் இளைய தலைமகன் என்று அன்று போற்றப்பட்ட முன்னாள் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சரும், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வி. புத்திரசிகாமணி அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் சுவை ததும்ப பேசக்கூடிய சிறந்த பேச்சாளர். தமிழ் இலக்கியத்தை சுவையோடு பேசும் ஆற்றல் கொண்டவர். தற்போது எழுத்தாளர் தமிழ்ச் செல்வன் நல்ல இலக்கிய மேடை பேச்சாளராகத் திகழுகிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி துரை. மனோகரன் அவர்கள் மலையகத்தில் சிறந்த பேச்சாளராகத் திகழ்பவர். விமர்சனத் துறையிலும் சிறந்து விளங்குபவர்.

அந்த வகையில் மலையகத்தில், குறிப்பாக கண்டியில் சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தவர் சொல்லின் செல்வர் அமரர் செ. நடராஜா அவர்கள். எழுதாவிட்டாலும் தனது மேடைப் பேச்சின் மூலம் இலக்கிய உலகில் தடம் பதித்தவர். தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்த்தவர்.

முதலில் அவர் ஒரு சிறந்த வாசகர். தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். நூல் வெளியீட்டு விழாக்களில் கலந்து ஒரு நூலை மிகச் சுருக்கமாக, ஆழமாக விமர்சிப்பதில் வல்லவர். சொற்களை அளந்து, தான் எடுத்துக் கொண்ட கருப்பொருளை சொற்கள் அங்கும் இங்கும் அலை பாயாமல், சிந்தாமல், சிதறாமல் தான் எடுத்துக் கொண்ட நேரத்திற்கு முன்பாகவே தனது பேச்சை முடித்துக் கொள்ளும் வல்லமை வாய்ந்தவர்.

இவர் அதிகமாக உரையாற்றிய மேடை கண்டி சிட்டி மிஷன் மண்டபமாகும். மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் நடாத்திய அதிகமான இலக்கிய நூல் வெளியீட்டு விழாக்களில் தலைமை உரை அல்லது விமர்சன உரைகளை ஆற்றி பாராட்டுக்களைப் பெற்றவர். இவரது உரையை கேட்பதற்கே அதிகமான பார்வையாளர்கள் அந்நிகழ்வுகளில் கலந்து கொள்வார்கள். இவர் பேசும் போது இன்னும் பேச மாட்டாரா என பார்வையாளர்களை கவரும் பேச்சாற்றல், மேடையில் அவரது கம்பீரத் தோற்றம் அனைவரையும் கவரும் தன்மை கொண்டவை.

இலக்கிய விழாவா? பட்டிமன்றமா? நூல் வெளியீட்டு விழாவா? சமய விழாக்களா? அந்நிகழ்வுகளில் தலைமையேற்று சிறப்பாக ஆக்கித் தருகின்ற அவரது ஆளுமை மிக்க தலைமைத்துவம்.

இவரது மேடை பேச்சில் கனிவு, அடக்கம், நிதானம், எழுத்தாளனை ஊக்கப்படுத்தும் நூல் விமர்சனங்கள், அழகு தமிழில், ஆங்கில மொழியின் நீரோட்டம் போல உரையாற்றும் சிறப்பு, தமிழ் மொழி அவரது நாவில் கொஞ்சி விளையாடும், பனிமொழி (குளிர்ந்த சொல்) மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் நடாத்திய நூல் வெளியீட்டு விழாக்களில் பேராசிரியர்களான க. அருணாசலம், துரை. மனோகரன், அம்பலவானர் சிவராஜா ஆகியோர்களது ஆய்வு நூல் விமர்சனங்களும் லண்டனைச் சேர்ந்த எஸ். அகஸ்தியர், திருமதி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், விமல் குழந்தைவேல் ஆகியோர்களது சிறுகதைத் தொகுதிகளுக்கும் முன்னாள் அமைச்சரும் கவிஞருமான எம். எச். எம். அஸ்ரப் அவர்கள் எழுதிய நான் எனும் நீ கவிதை நூலுக்கும் அவர் ஆற்றிய விமர்சன உரைகள் காலத்தால் அழியாது.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க்கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்"

கேட்போரைக் கவரும் தன்மை உடையதாகவும் கேட்காதவரும் தேடி வந்து விரும்பிக் கேட்கக் கூடியதாகவும் அமைவதே சொல்வன்மை என வான்புகழ் வள்ளுவனின் இக்கூற்று அமரர் சொல்லின் செல்வர் செ. நடராஜாவிற்கு மிகப் பொருந்தும். அந்தவகையில் ஒரு மேடையில் இவர் சிறப்பாக ஆற்றிய உரையை அறிந்து அடுத்த கூட்டத்தில் கலந்து இவர் பேசும் போது ஆவலோடு கேட்கும் ஒரு நிலை உருவாகிய ஒரு நல்ல பேச்சாளர் இவர்.

**கண்டியில்**
**அனைவருக்கும் நிழல் கொடுத்த**
**அறிவு ஜீவி**
**நடராஜா என்ற ஆலமரம்**
**சரிந்ததது**

சமூகப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், கண்டி இந்து வாலிபர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் ஸ்தாபகத் தலைவராக இருந்து இளைஞர்களின் வளர்ச்சிக்கும் அவர்களது சமூகப் பணிகளுக்கு ஓர் ஊன்றுகோளாகவும் இருந்துள்ளார்.

மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் முக்கிய உறுப்பினரான இவர், அம்மன்றத்தின் செயற்பாடுகளிலும் வளர்ச்சியிலும் முக்கிய பங்கேற்றவர். அம்மன்றத்தின் சிறப்புப் பேச்சாளரும் இவரே. இம்மன்றத்தின் கௌரவத்திற்குரிய ஒருவராக மதிக்கப்பட்டவர் என்பது மனங் கொள்ளத்தாகும்.

இலங்கை இந்திய நட்புறவுச் சங்கச் (கலியாணசிலுக்கா) செயலாளராக இருந்து அவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டியில் இனங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த பல்வேறு வகையில் அவர் சேவையாற்றியுள்ளார். அவரது மேடைப் பேச்சுக்களிலும் இதனை சிறப்பாக செய்திருக்கிறார்.

கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் 1999ஆம் ஆண்டு நடாத்திய "இலக்கிய உலகில் இவர்கள்" கருத்தரங்கில் அமரர் செ. நடராஜா அவர்களை கௌரவித்து கலாநிதி துரை. மனோகரன் அவர்களின் கரத்தால் "சொல்லின் செல்வர்" பட்டம் வழங்கி சிறப்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சகல பணிகளையும் மதித்து மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாக்களில் இருமுறை விருது, சான்றிதழ், பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கண்டி இந்து இளைஞர் மன்றம், மலையக கலை இலக்கியப் பேரவை, மலையக கலை கலாசார சங்கம் (இரத்தின தீபம்) கண்டிக் கலைக் கழகம் போன்ற அமைப்புக்கள் இவரை பாராட்டி கௌரவித்துள்ளது.

தனது வாழ்வின் இறுதிவரை கலை, இலக்கிய, சமூக, கல்வித் துறைக்கு பெரும் சேவையாற்றிய மதிப்பிற்குரிய செ. நடராஜா அவர்கள்.

உன்னஸ்கிரிய தோட்டத்தில் பிறந்த இவரின் தந்தையார் அத்தோட்டத்தில் கண்டக்டராக கடமையாற்றியுள்ளார். இவருக்கு ஐந்து பிள்ளைகள். இரண்டு ஆண்கள் மூன்று பெண்கள். ஆண்களில் இவர் இளையவர்.

கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரியில் எஸ். எஸ். சி. வரை கல்வி கற்ற இவர், தனது உயர் கல்வியை தமிழ் நாடு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி. பட்டமும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டம் பெற்றார்.

07.07.1940 ஆம் ஆண்டு பிறந்த இவர், 1965 ஆம் ஆண்டு பட்டதாரியானார். அதே ஆண்டு இலங்கை முற்போக்கு அணியைச் சேர்ந்தவரும் சமூக உணர்வு மிக்கவருமான பெரியய்யாவின் புதல்வியான பட்டதாரி லலிதாவை மணம் முடித்தார். கண்டி அசோகா வித்தியாலயத்தில் துணை முதல்வராக கடமையாற்றிய இவர். 1971ஆம் ஆண்டு அவ்வித்தியாலயத்தில் முதல்வராகப் பொறுப்பேற்றார். அன்று முதல் தான் அமரராகும் வரை தனது கடமைகளை செவ்வனே செய்து வந்தார்.

இவருக்கு இரண்டு பெண் மக்கள். மூத்த மகள் வாசுகி, அடுத்தவர் வசுமதி. இருவரும் திருமணம் முடித்தவர்கள். வாசுகி டாக்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது கல்வி, சமூக, மேடை பேச்சின் மூலம் சகலரையும் கவர்ந்த இவர் 17.06.2006 சனிக்கிழமை மாலை 6:00 மணியளவில் கொழும்பில் அமரரானார். தனது குடும்பம், உறவினர்கள் தன்னை உளமார நேசித்த இலக்கிய உலகத்தினரையும் நண்பர்களையும் பெரும் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு தனது மூச்சை நிறுத்திக் கொண்ட இவரை மலையகம் குறிப்பாக கண்டி மாநகரம் மறக்காது.

"சொல்லில்வல்லன் சோர்விலன் அஞ்சானவனை இகல்வெல்லன் யாருக்கும் அரிது"

சொல்லாற்றல் படைத்தவனாகவும் சோர்வு அறியாதவனாகவும் அஞ்சா நெஞ்சம் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது என்கிறார் வான்புகழ் வள்ளுவ பெருந்தகை.

கண்டியில் மேடை பேச்சில் இவரை எவரும் வெல்ல முடியாத ஒரு நிலை இருந்தது. ஆனால் விதி இவரை வென்றுவிட்டது. கண்டி மாநகரில் அறிவு எனும் ஆலமரத்தின் ஊடாக அனைவருக்கும் நிழல் கொடுத்த அமரர், சொல்லின் செல்வர் செ. நடராஜா என்றும் எம்மோடு வாழ்வார்.

நன்றி "கலைக்கேசரி"
12.08.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினக்குரல் விநியோக முகாமையாளர் கே. கே. சற்குணம் அவர்களின் கண்ணீர் அஞ்சலி

கண்டியில் நடந்த இலக்கிய விழா ஒன்றில்
அமரர் சொல்லின் செல்வர் செ. நடராஜா அவர்களை
சந்திக்கும் ஒரு வாய்ப்பைப் பெற்றேன்.
இதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர்
கண்டி இராமன்.
அவ்விழா மேடையில்
அமரர் நடராஜா அவர்களின் பக்கத்தில்
அமரும் வாய்ப்பைப் பெற்றேன்.
அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர் என்றும்
தனது மேடைப் பேச்சுக்காக
"சொல்லின் செல்வர்" பட்டம் பெற்றவர்
என்றும் கேள்விப்பட்டுள்ளேன்.
அன்று தான் அவரின் அற்புதமான
பேச்சைக் கேட்டேன்.
மலையகத்தில் இவ்வாறான ஒரு பேச்சாளரா?
என வியந்து போனேன்.
சென்ற மாதம் 19ஆம் திகதி மாலை
கண்டி இராமன் தொலைபேசி மூலம்
அந்த சோகமான சம்பவத்தை கூறியபோது
அதிர்ச்சியடைந்தேன்.
அவரது புகழுடம்புக்கு நேரில் அஞ்சலி
செலுத்த முடியாமல் போனாலும்
எழுத்து மூலம் அவருக்கு எனது கண்ணீரை
காணிக்கையாக்குகின்றேன்.




மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த நூராணியா ஹசன் எழுதிய "எனது பார்வை" நூல் வெளியீட்டு விழாவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நசார் ஹாஜியார், சொல்லின் செல்வர் செ. நடராஜா, நூரானியா ஹசன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளர் எம்.என்.ராஜா ஆகியோர்களை படத்தில் காண்கிறீர்கள்.

படம் வீரகேசரி சதீஸ்

## கண்டி மண் மறக்காத மாமனிதன் சொல்லின் செல்வர் செ. நடராஜா

சொல்லின் செல்வர் அமரர் செ. நடராஜா அவர்கள் சிறந்த பேச்சாளர் என்பது அனைவரும் அறிந்ததே. அவர் சிறந்த மனிதாபிமானி. நல்ல பல பண்புகளை கொண்டவர். அவரது மேடைபேச்சை கேட்டு பலமுறை நான் வியந்துள்ளேன். அவரின் மறைவு எல்லோருக்கும் பேரிழப்பாகும்.

பி.பாலேந்திரா
முகாமையாளர், வீரகேசரி கண்டிக் கிளை.

## இவ்விதழ் வெளிவர அனுசரணை வழங்கியவர்கள்

**பேராசிரியர் எம். சின்னத்தம்பி அவர்கள்**
பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

**திருமதி மகாலக்ஷ்மி சோமபாலன்**
ஜனலங்கா எண்டர்பிரைசஸ், கண்டி.

**இரா. மகேஸ்வரன் எம்.ஏ.**
சிரேஷ்ட துணை நூலகர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

**என். செளந்தராஜன்**
ஆஷா டெக்ஸ்டைல்ஸ், கண்டி.

சொல்லின் செல்வர் அமரர் செ.நடராஜா
அவர்களுக்கு நடைபெறும் இந்நிகழ்வுக்கு
அனுசரணை வழங்கிய

**லக்கிலேண்ட் எஸ். முத்தையா ஜே.பி.**

**நாகலிங்கம் இரத்தினசபாபதி மோகன் ஜே.பி.**

ஆகியோர்களுக்கு மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் நன்றி பகர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரகேசரி வார இதழ், மித்திரன் வார மலர், மெற்றோ நியூஸ் வார இதழ், மெற்றோ நியூஸ் தின இதழ் ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்

## வி. தேவராஜ் பி.ஏ(இ),எம்.ஏ.(மைசூர்)

### அவர்களின் அனுதாபச் செய்தி

சொல்லின் செல்வர் செ. நடராஜா காலமானார் என்ற செய்தி எனக்குக் கிடைத்த போது பெரும் சோகத்தில் ஆழ்ந்து போனேன். கண்டியில் நடந்த பல நூல் வெளியீட்டு விழாக்களில் அடிக்கடி சந்தித்துள்ளேன். நான் தலைமை தாங்கும் விழாக்களில் அவர் உரையாற்றியுள்ளார். அவர் தலைமைதாங்கிய சில விழாக்களில் நான் உரையாற்றியுள்ளேன். நல்ல பேச்சாளர், மனித நேயம் கொண்டவர். யார் மனதும் புண்படாதவாறு உரையாற்றிய பண்புள்ள மனிதர். ஆற்றல் மிக்க பேச்சாளர். அவரின் மறைவு இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும். அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அஞ்சலியை குறிஞ்சித்தேனீ மூலம் தெரிவிக்கின்றேன்.

## தினகரன் வாரமலர் ஆசிரியர்

## அருள் சத்தியநாதன்

### அவர்களின் கண்ணீர் அஞ்சலி

சொல்லின் செல்வர் செ. நடராஜா அவர்கள் அமரரானார் என்ற செய்தியை பத்திரிகைகள் வாயிலாக அறிந்து திடுக்கிட்டேன். கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் கண்டியில் நடத்திய பல இலக்கிய விழாக்களில் அவரது சிறப்பான இலக்கிய உரைகளைக் கேட்டு பிரமித்துள்ளேன்.

சிறந்த மேடை பேச்சாளர், பழகுவதற்கு இனிமையானவர், நற்பண்புகளைக் கொண்டவர், கல்விமான், அதை விட ஒரு நல்ல மனித நேயன். இவரது மறைவு மலையக இலக்கியத் துறைக்கு பெரும் இழப்பாகும். இவரது மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எனது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர்

## எஸ்.அருள்சாமி

### அவர்களின் கண்ணீர் அஞ்சலி

அண்மையில் அமரரான சொல்லின் செல்வர் என்று அன்போடு அழைக்கப்படுகின்ற முன்னாள் கண்டி அசோகா வித்தியாலயத்தின் முதல்வர் செ. நடராஜா அவர்களின் துக்ககரமான செய்தி என்னையும் பெரும் துக்கத்தில் ஆழ்த்தியது.

அவர் ஒரு சிறந்த மனிதர் என்றும் பல நல்ல பண்புகளைக் கொண்டவர் என்றும் மலையகத்தில் சிறந்த பேச்சாளர்களில் ஒருவர் என்றும் கேள்விபட்டுள்ளேன். அண்மையில் ஒரு விழாவில் அவரது சிறப்பான உரையை கேட்கும் ஒரு வாய்ப்பைப் பெற்றேன்.

"கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்கேளாரும்
வேட்ப மொழி வதாம் சொல்"

என்ற வள்ளுவ பெருந்தகையின் குரள் படி வாழ்ந்து காட்டியவர் என்றும் கேட்போரை கவரும் பேச்சாற்றல் கொண்டவர் என்றும் அறிந்துள்ளேன். இவ்வாறான ஒருவர் எம்மை விட்டு பிரிந்தது மலையக கலை இலக்கியத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அமைச்சின் மூலம் கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## முன்னாள் மத்திய மாகாண இந்து கலாசார கல்வி அமைச்சர்

## வே. இராதாகிருஷ்ணன்

### அவர்களின் நினைவலைகள்

அமரர் சொல்லின் செல்வர் செ. நடராஜா அவர்களை நீண்ட காலமாக அறிவேன். கண்டியில் அவர் கலந்துகொண்ட அல்லது தலைமைத் தாங்கிய பல இலக்கியக் கூட்டங்களில் நான் பிரதம விருந்தினராக கலந்துகொண்டுள்ளேன். அற்புதமான பேச்சாளர். வியக்கத்தக்க பேச்சாளர். மலையகத்தில் அவரைப் போல பத்து பேச்சாளர்கள் இருந்திருந்தால் இந்த மலையக சமூகம் என்றோ விழிப்புற்றிருக்கும். அவரின் இழப்பு மலையக சமூகத்திற்கு பேரிழப்பாகும்.

## என்றும் எங்கள் நினைவில்......

*நேர்த்தியான உடையுடன்*
*சரிவிலா நடையும்*

*கம்பீர தோற்றத்துடன்*
*கனிவான பேச்சும்*

*இன்றும் இனித்திடும்*
*உங்கள் அழகான தமிழும்*

*எங்களை வழிநடத்திய*
*இணையிலா தலைமையும்*

*மறவாது என்றும்....*

மர்ஜான் பஸீல்
பழைய மாணவன், அசோகா வித்தியாலயம்
மற்றும்
புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் 97ம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள்

இவ்விதழை வடிவமைத்து அச்சிட்டவர்கள்

PrintEx
For high quality printing

தரமான
அச்சு வேலைகளுக்கு
நாட வேண்டிய இடம்....

Graphic Designing
Type Setting (Tamil, Sinhala. English & Arabic)
Offset Printing, Plate Making,
Digital Copy Printing, Laminating,
Digital Printing (Name Boards), Etc.,..
416, Colombo Road, Pilimatalawa, Sri Lanka.
081 2575219 / 0779 167545 / 0723 512578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org